# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C No. 529 / 2019 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 4 |
| Name | : செல்லத்துரை. |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.01.2024.

\- - - - - - -

எதிரி ஆஜர்.

<u>முதல் விசாரணை:</u>

நான் உத்தப்பநாயக்கனூரில் குடியிருக்கிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். கடந்த 2016 ஆம் ஆண்டு இரவு சுமார் 08.30 மணிக்கு உத்தப்பநாயக்கனூரில் உள்ள அணைப்பட்டி செல்லும் சாலையில் உள்ள என் கடை முன்பு மேற்கு பக்கம் பார்த்து அமர்ந்திருந்தேன். முன்னாடி அப்பாசு மகன் ஓடிவந்தார். பின்னாடியே ஒருவர் அவரை குத்துவதற்கு கத்தியைக் கொண்டு துரத்திவந்தார். அதைப் பார்த்து அப்பாஸ் மகனை குத்தப்போகிறார் ஓடிவாங்க என்று சத்தம்போட்டேன். பின்னர், நான் எதிரியை விரட்டிச்சென்றேன். அவர் இருட்டுக்குள் சென்று

மறைந்துவிட்டார். அதன்பின்னர் என் சத்தத்தைக் கேட்டு அங்குள்ளவர்கள் நிறைய திரண்டுவிட்டார்கள். ஆஜர் எதிரிதான் நான் துரத்திச் சென்றவர். அப்பாஸ் மகன் கீழே விழுந்துவிட்டார். நான் சென்று பார்த்தேன். அப்போது அப்பாஸ் மகனுக்கு ரத்தக் காயம் இருந்தது. போலிசுக்கு நான் தகவல் சொன்னேன். அவ்வழியாக வந்த போக்கு ஆட்டோவில் காயம்பட்டவரை சிகிச்சைக்குக்கு அனுப்பிவைத்தேன். அதுசமயம் காயம்பட்டவரிடம் யார் உன்னைக் குத்தினார் என்று கேட்டேன். அதற்கு அவர் எனக்குப் பெண் கொடுத்த மாமன்தான் குத்தினார் என்று சொன்னார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை -</u>

இல்லை.

ஒப்பம் / P.S. ரஸ்கின் ராஜ், 06.01.2024.
சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.